# மேலூர் நகராட்சி
# திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016
# துணை விதிகள்

இந்திய அரசு , சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம் 1986 பிரிவு 3, 6 மற்றும் 25ன் கீழ் திடக்கழிவுகளை முறைப்படுத்துவதற்காக திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016ஐ உருவாக்கியுள்ளது. இவ்விதிகளில் சொல்லப்பட்டுள்ள திடக்கழிவுகளை பிரித்து சேகரித்து எடுத்துச் செல்வதற்கான மற்றும் இறுதி செய்வதற்கான வழிவகைகளை செயலாக்கம் செய்வது அந்தந்த உள்ளாட்சி அமைப்பின் கடமையாகும். இதில் கழிவுகளை உருவாக்குபவரும் நகராட்சி அமைப்புடன் இணைந்து கழிவுகளை வெளியில் கொட்டுவதை தவிர்ப்பதற்கும், விதிகளின்படி கழிவுகளை வெளியேற்றுவதற்கும் பொறுப்புள்ளவராவார். அதன்படி மேலூர் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தை திறம்பட செயல்படுத்துவதற்கு தமிழ்நாடுமாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 அத்தியாயம் (8)பிரிவுகள் 153, 156, 157,158,159,160 மற்றும்161 உபபிரிவுகளைப் பின்பற்றி பிரிவு 306ன் கீழ் கீழ்க்காணும் துணை விதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

கழிவுகளை உருவாக்குபவரின் கடமைகள்

1(அ) ஒவ்வொரு கழிவுகளை உருவாக்குபவரும் அவற்றை மக்கக்கூடியவை, மக்காதவை, வீட்டு நச்சுத் தன்மை கொண்டவை என மூன்றாக பிரித்து, சேகரித்து நகராட்சி பணியாளர்களிடம் அல்லது நகராட்சி குப்பை வாகனங்களில் அவர்கள் வரும் போது அளிக்க வேண்டும்.

(ஆ) பயன்படுத்தப்பட்ட சேனிடரி நாப்கின், பேடு ஆகியவற்றை தயாரித்த நிறுவனம் அல்லது வணிக நிறுவனத்தின உறையிலேயே பாதுக்காப்பாக வைத்து அதற்கென வைக்கப்பட்டுள்ள குப்பைத்தொட்டியில் போட வேண்டும்.

(இ) கட்டிட இடிபாடுகளை திடக்கழிவுகளுடன் சேர்க்காமல் நகராட்சி அனுமதி வழிகாட்டுதலின்படி அப்புறப்படுத்தப்பட வேண்டும்.

(ஈ) தோட்டக்கலை மற்றும் வீட்டுத் தோட்டத்திலிருந்து வெளியாகும் கழிவுகளை தன்னுடைய இடத்திலேயே வைத்திருந்து முறையாக அப்புறப்படுத்துதல் வேண்டும்.

2. எந்தவொரு கழிவுகளை உருவாக்குபவரும் கழிவுகளை பொதுஇடத்திலோ ,திறந்தவெளி, காலிமனைகளிலோ எரிவதோ, எரிப்பதோ, புதைப்பதோ அல்லது சாக்கடை கால்வாய்களிலும் நீர்நிலைகளிலும் கொட்டுவதோ கூடாது.

3. அனைத்து கழிவுகளை உருவாக்குபவரும் மேலூர் நகராட்சியால் நிர்ணயிக்கப்படும் உபயோகிப்பாளர் கட்டணம் செலுத்த கடமைப்பட்டவர் ஆவார்.

4. எந்த ஒரு நபரும் நூறுபேருக்கும் மேலாக கூடுதலான நிகழ்ச்சியினை உரிம்ம் பெறாத இடத்தில் ஏற்பாடு செய்யும் போது மூன்று தினங்களக்கு முன்னதாக நகராட்சிக்கு தகவல் அளிக்க வேண்டும். அதன்மூலம் மேற்படி நிகழ்வினால் ஏற்படும் கழிவுகளை தொடர்புடைய நிகழ்ச்சி அமைப்பாளரால் பிரித்து, சேகரித்து அப்புறப்படுத்துவற்கான நடவடிக்கை உறுதி செய்யப்படும்.

5.ஒவ்வொரு சாலையோர நடைபாதை வியாபாரிகளும் தங்களுடைய வியாபாரம் தொடர்புடைய வெளியாகும். உணவுக்கழிவுகள், ஒருமுறையே பயன்படுத்தப்படும் தட்டுகள், கப்புகள், உறைகள், இளநீர் ஓடுகள், காய்கறி மற்றும் பழக்கழிவுகள் உள்ளிட்டவைகளை சொந்தப்பொறுப்பில் சேகரித்து அவற்றை அதற்கென வைக்கப்பட்டுள்ள குப்பைத்தொட்டிகளிலோ அல்லது வாகனங்களிலோ கொடுக்க வேண்டும்.

6. வணிக அமைப்புகளிலும், குடியிருப்போர் நலஅமைப்புக்களும் தங்களது கழிவுகளை மக்கக்கூடியவை, மக்காதவை, மறு சுழற்சிக்குட்பட்டவை என பிரித்து நகராட்சி பணியாளர்களிடமோ அல்லது அதற்கென வரும் நகராட்சி வாகனங்களிலோ அளிக்க வேண்டும்.

7. 5000 ச.மீ பரப்பளவிற்கும் மேலுள்ள நிறுவனங்கள் மற்றும் பாதுகாக்கப்பட்ட அமைப்புகள் கழிவுகளை தங்களதுசொந்தப்பொறுப்பில் மக்கும், மக்காதவை , மறு சுழற்சிக்குரியவை எனப் பிரித்து உரிய முறையில் தீர்வு காணலாம். அல்லது நகராட்சி பணியாளர்களிடத்தோ அல்லது வாகனங்களிலோ அளிக்கலாம்.

8. அனைத்து வகை உணவு விடுதிகள், தங்கும்விடுதியுடன் கூடிய உணவு விதிகள் உள்ளிட்ட அனைவரும் தங்களுடைய தொழிலிடத்தில் உருவாகும் கழிவுகளை மக்கும், மக்காதவை, மறு சுழற்சிக்குரியவை எனப் பிரித்து நகராட்சி பணியாளர்களிடம் அல்லது நகராட்சி வாகனங்களில் ஒப்படைக்க வேண்டும்.

9. காகிதம், தண்ணீர் பாட்டில், மதுபான பாட்டில், குளிர்பான காலிப்பாட்டில்கள், பழச்சாறு உறைகள் உள்ளிட்ட அந்த கழிவுகளையும் திறந்த வெளியிலோ, பொதுஇடங்களிலோ எரிவதோ, எரிப்பதோ, புதைப்பதோ அல்லது சாக்கடைக் கால்வாய்களிலும் நீர்நிலைகளிலும் கொட்டுவதோ கூடாது. மாறாக விதிகளின்படி பிரித்து சேகரித்து உரிய முறையில் அப்புறப்படுத்தப்பட வேண்டும்.

10. திடக்கழிவு மேலாண்மை தொடர்பாக விதிகளில் சொல்லப்பட்டுள்ள நகராட்சியின் பொறுப்புகள் அனைத்தையும் நகராட்சி மேற்கொள்ளும்.

11. பொதுமக்களின் நலன்கருதி ஏற்படுத்தப்பட்டுள்ள மேற்கண்ட விதிகளை மீறுபவர்களுக்கு அபராதம் விதிக்கப்படும்.

உபயோகிப்பாளர் கட்டணம் பின்வருமாறு

| வ.எண். | விபரம் | காலம் | கட்டணம் ரூ. |
|---|---|---|---|
| 1.குடியிருப்பு | | | |
| அ. | தனிநபர் குடியிருப்பு (சொத்துவரி ரூ.500க்குள்) | மாதம் | ரூ.20.00 |
| ஆ. | தனிநபர் குடியிருப்பு (சொத்துவரி ரூ.501- 1000க்குள்) | மாதம் | ரூ.30.00 |
| இ. | தனிநபர் குடியிருப்பு (சொத்துவரி ரூ.1001- 2000க்குள்) | மாதம் | ரூ.50.00 |
| ஈ. | தனிநபர் குடியிருப்பு (சொத்துவரி ரூ.2001 மேல்) | மாதம் | ரூ.100.00 |
| 2.நிறுவனம் | | | |
| அ. | தனியார் பள்ளி/கல்லூரி விடுதி/ தனியார் அலுவலக வளாகம் | மாதம் | ரூ.500.00 |
| ஆ. | மருத்துவமனை (படுக்கையுடன்) | மாதம் | ரூ.500.00 |
| இ. | கிளினிக் | மாதம் | ரூ.300.00 |
| 3. வணிகம் | | | |
| அ. | டீஸ்டால் / சிற்றுண்டி | மாதம் | ரூ.100.00 |
| ஆ. | நடமாடும் உணவகம் | தினமும் | ரூ.10.00 |
| இ. | உணவகம் சிறியது | மாதம் | ரூ.250.00 |
| ஈ. | உணவகம் பெரியது | தினமும் | ரூ.50.00 |
| உ. | வணிக வளாகம் | தினமும் | ரூ.50.00 |
| ஊ. | திருமண மண்டபம் | நிகழ்வு ஒன்றுக்கு | ரூ.500.00 |
| எ. | தையல் கடை | மாதம் | ரூ.100.00 |
| ஏ. | இரு சக்கர வாகன பழுது நீக்கும் கடை | மாதம் | ரூ.100.00 |
| ஐ. | மோட்டார் வாகனம் பழுது பார்க்கும் கடை | மாதம் | ரூ.250.00 |
| ஒ. | தேங்காய்/பூ/பழம்/காய்கறிகள் வியாபாரம் | மாதம் | ரூ.100.00 |
| ஓ. | பலசரக்கு/ஸ்டேசனரி/மருந்தகம் | மாதம் | ரூ.100.00 |
| ஔ. | வாழைத்தாள் கமிஷன் மண்டி | மாதம் | ரூ.500.00 |
| 4. மற்றவை | | | |
| அ. | மட்டன்/சிக்கன்/மீன் ஸ்டால் | மாதம் | ரூ.100.00 |
| ஆ. | சினிமா தியேட்டர் | மாதம் | ரூ.500.00 |
| இ. | ஜவுளி கடை வியாபாரம் | மாதம் | ரூ.500.00 |
| ஈ. | தோல் , ரெக்ஷின் பை தயார் செய்தல், காலணி விற்பனை, தயார் செய்தல், காலணி விற்பனை | மாதம் | ரூ.100.00 |
| உ. | மரக்கழிவுகள் | நிகழ்வு 1க்கு | ரூ.100.00 |
| ஊ. | தோட்டக்கழிவுகள் | நிகழ்வு 1க்கு | ரூ.100.00 |
| எ. | வீட்டுத் தோட்டக் கழிவுகள் | நிகழ்வு 1க்கு | ரூ.100.00 |

திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016ன் கீழ் உருவாக்கப்பட்டுள்ள துணை விதிகளை மீறுபவர்களுக்கு கீழ்க்கண்டவாறு அபராதம் வசூலிக்கப்படும்.

| வ. எண். | துணை விதி மீறல் | அபராதம் |
|---|---|---|
| 1. | பொதுத் தெருக்களிலும், காலிமனைகளிலும் வியாபாரக் கடைகள், வணிக நிறுவனங்கள் கழிவுகளை கொட்டுதல், வாகனங்களில் கழிவுகளை கொட்டிக்கொண்ட செல்வது. | ரூ.250 |
| 2. | கீழ்க்கண்ட வகையில் கழிவுகளை பிரித்து உரிய முறையில் சேர்க்காதது | |
| | தனிநபர் வீடுகள் | ரூ.100 |
| | அடுக்குமாடி குடியிருப்புகள்/தொகுப்பு வீடுகள் | ரூ.250 |
| | அதிக அளவிலான கழிவுகளை உருவாக்குபவர் | ரூ.500 |
| 3. | கட்டிட இடிபாடுகளை உரிய முறையில் பிரித்து அப்புறப்படுத்தாமை | ரூ.500 |
| 4. | தோட்டக்கழிவுகள் மற்றும் மரக்கிளைகளை உரிய முறையில் அப்புறப்படுத்தாமை | ரூ.250 |
| 5. | கழிவுகளை குப்பைத்தொட்டிகளில் கொட்டாமல் கண்ட இடங்களில் கொட்டுதல் | ரூ.250 |
| 6. | கழிவுகளை எரித்தல் | |
| | அ)தனிநபர் வளாகத்திற்குள் | ரூ.100 |
| | ஆ) தனிநபர் பொதுஇடத்தில் | ரூ.200 |
| | இ)தொழில், வணிக நிறுவனங்களில் | ரூ.500 |
| 7. | வீட்டில்ல்லாத மீன், கோழி, ஆடு,மாடு இறைச்சிக் கழிவுகளை முறைக சேகரித்து அப்புறப்படுத்தாமை | ரூ.250 |
| 8. | தொருவோர, மற்றும் தள்ளுவண்டி வியாபாரிகள் உரிய கழிவுகள் சேகரிக்கும் கூடைகள் இல்லாமல் இருப்பது. | ரூ.100 |
| 9. | தெருவோர மற்றும் தள்ளுவண்டி வியாபாரிகள் முறையாக கழிவுகளை சேகரித்து அப்புறப்படுத்தாத்து | ரூ.100 |
| 10. | பொதுமக்கள் கூடிய இடங்களில் 24 மணிநேரத்திற்கும் மேலாக கழிவுகள் சுத்தம் செய்யப்படாமல் இருப்பது. | வைப்புத் தொகை பறிமுதல் மற்றும் அபராதம் ரூ.1000 |

இப்பொருள் தொடர்பான பொதுமக்களின் கருத்துக்கள் மற்றும் ஆட்சேபனைகள் **30** தினங்களுக்குள் தெரிவிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறது**.**

மேலூர்
02.2017

ஜெ.பிரேம்ஆனந்த்.பி.எஸ்.சி..,
தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்
மேலூர் நகராட்சி